**செய்தி வெளியீடு எண்:486** **நாள் : 25.09.2014**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 22.9.2014 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ் இணையக் கல்விக் கழக கட்டடத்தில் 82 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கணித்தமிழ் ஆய்வுக்கூடம், கலையரங்கம் மற்றும் தமிழ் மென்பொருள் உருவாக்க மையம் ஆகியவற்றையும் கட்டுப்பாட்டு அறையுடன் கூடிய படப்பிடிப்பு தளத்தையும் திறந்து வைத்தார்கள்.

தகவல் தொழில் நுட்பவியல் முன்னேற்றங்களைப் பயன்படுத்தி இணையம் வாயிலாக தமிழ் மொழியைப் பரப்புவதற்கு தகவல் தொழில் நுட்பவியல் துறையின் மூலம் தமிழ் மென்பொருள் உருவாக்குவதற்காகவும், வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுக்கு தமிழ் மொழி கற்க தேவையான வசதிகளை ஏற்படுத்திடவும், தமிழ் மொழியின் அடிப்படை ஆராய்ச்சிக்காகவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் மூலம் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு அரசால் தமிழ் இணையக் கல்விக் கழகத்திற்கென (Tamil Virtual Academy) அந்த நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ள கணித்தமிழ் ஆய்வுக் கூடத்தில் (Lab for Tamil Computing) 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1,085 சதுர அடி பரப்பளவில், கணிப்பொறி, இணைய வசதி மற்றும் குளிர்சாதன வசதியுடன் கூடிய 24 பணிக்கூடங்கள் (Modular Work Station) கொண்ட உள்கட்டமைப்பு பணிகள்;

தமிழ் இணையக் கல்விக் கழகத்தால் 45 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 1682 சதுர அடி பரப்பளவில், நூலகம், சேவையக அறை மற்றும் 13 அறைகளில் குளிர்சாதன வசதி, இணைய வசதியுடன் கூடிய நவீன கணிப்பொறிகள் கொண்ட தமிழ் மென்பொருள் உருவாக்க மையம் (Incubation Centre);

தமிழ் இணையக் கல்விக் கழக கலையரங்கத்தில் கல்வித்திட்டங்கள் தொடர்பான கூட்டங்கள், மாதாந்திர தொடர் நிகழ்ச்சிகள், தமிழ் தொடர்பான கல்வி சார்ந்த நிகழ்ச்சிகள்

ஆகியவற்றை நடத்துவதற்கு ஏதுவாக 17 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2274 சதுர அடி பரப்பளவில் குளிர்சாதன வசதியுடன் 150 பேர் அமரக்கூடிய வகையில் உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள்;

என மொத்தம் 82 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ் இணையக் கல்விக் கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள கணித்தமிழ் ஆய்வுக்கூடம், கலையரங்கம் மற்றும் தமிழ் மென்பொருள் உருவாக்க மையம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும், தமிழ் இணையக் கல்விக்கழகத்தில் அதன் பாடத்திட்டங்கள் தொடர்பான நிகழ்ச்சிகள் மற்றும் இணைய வகுப்பறை பாடங்களை ஒளிப்பதிவு செய்வதற்காக 2,274 சதுர அடி பரப்பளவில் குளிர்சாதன வசதியுடன் ஒலி, ஒளி அமைப்பு கட்டுப்பாட்டு அறையுடன் கூடிய படப்பிடிப்பு தளத்தையும் (Studio) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் முக்கூர் திரு என். சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் திரு மோகன் வர்கீஸ் சுங்கத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), தகவல் தொழில்நுட்பவியல் துறைச் செயலாளர் திரு தா.கி. ராமச்சந்திரன், இ.ஆ.ப., தமிழ் இணையக் கல்விக்கழக இயக்குநர் பேராசிரியர் ப.அர. நக்கீரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
நாள்: 25.9.2014